**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8102079

1. District : மாவட்டம் வேலூர் | PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு | Year: ஆண்டு 2018 | FIR No.: மு.த.அ. எண் 09/18 | Date: நாள் 15-10-2018

2. (i) Act சட்டம்: | Sections பிரிவுகள்: 10A Crpc r/w
(ii) Act சட்டம்: PC (Amendment) ACT 2018 | Sections பிரிவுகள்: 7 of Prevention of
(iii) Act சட்டம்: and Criminal Procedure | Sections பிரிவுகள்: Corruption (Amendment) ACT 2018.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : Code

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 07-09-2018 at 19.30 Hrs முன்பு.
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 08.09.2018 | Time நேரம் 0700 Hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time நேரம்

4. Type of Information : Written / Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலம்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 6 kms. வடகிழக்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் அலுவலகம், சத்துவாச்சாரி, வேலூர்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. ஜோதி | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் சம்பத்
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு. 53/18 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் துணை ஆய்வுக்குழு அலுவலர். | (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
① திரு. C. சுப்பிரமணியம் (57/18) S/o. செல்வன், உதவி இயக்குனர், பொறுப்பு-துணை இயக்குனர், நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் அலுவலகம், வேலூர் மண்டலம், சத்துவாச்சாரி, வேலூர். ② திரு. G. சகாதேவன் (54/2018), S/o. கோவிந்தபிள்ளை மேற்பார்வையாளர் / வரைவாளர் நிலை-II, நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் அலுவலகம், வேலூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
After Obtaining Concurrence from DVAC and adopting the Procedures followed in DVAC, Chennai, Registered a case.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .......................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
[signature] 15/10/18

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 15/10/2018

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
15-10-2018 at 1600 hrs.

Name: பெயர் P. விஜயலட்சுமி
Rank: நிலை காவல் ஆய்வாளர் No. எண்
வேலூர், [illegible]
கண்காணிப்பு பிரிவு,
வேலூர்.

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:</u> கடந்த 07.09.2018-ம்தேதி மாலை சுமார் 17.30 மணிக்கு, வேலூர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் P. விஜயலட்சுமி ஆகிய நான் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது, வேலூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலக துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு. S. ஜோதி அவர்கள் நிலையம் ஆஜராகி, வேலூர் மாவட்டம், வேலூர் மாநகர், சத்துவாச்சாரி தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய பகுதி-2-ல் உள்ள தனியார் கட்டிடத்தின் தரைதளத்தில், வேலூர் உள்ளூர் திட்ட குழும அலுவலகம் இயங்கி வருவதாகவும், அதன் மேல் தளத்தில் இயங்கி வரும் நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் அலுவலகத்தில், நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் மற்றும் அவருடைய குழுவினர்கள், Layout Approval-ளுக்காக கையூட்டு பெறுவதாக நம்பத்தகுந்த தகவல் வந்துள்ளதாக தெரிவித்ததின் பேரில், உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தும், துணை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை பொறுப்பு: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர் அவர்கள் அளித்த உத்திரவின் பேரில், மேற்படி வேலூர் மண்டல நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் அலுவலகத்தில் 07.09.2018-ம்தேதி 19.30 மணி முதல் 08.09.2018 காலை 01.50 மணி வரை இருதுறை திடீர் கூட்டு சோதனையானது, திரு. S. ஜோதி, துணை ஆய்வுக்குழு அலுவலர், வேலூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர் அவர்கள் மற்றும் வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினரால் இணைந்து நடத்தப்பட்டது. அதன் பின்னர் இந்த இருதுறை திடீர் கூட்டு சோதனை சம்மந்தமாக, வேலூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலக துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு. S. ஜோதி அவர்கள் மேற்படி உதவி இயக்குனர் பொறுப்பு: துணை இயக்குனர் திரு. C. சுப்ரமணியம் மற்றும் மேற்பார்வையாளர் / வரைவாளர் நிலை-II திரு. G. சகாதேவன் ஆகியோர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கக்கோரி புகார் மனு கொடுத்தார். அந்த மனுவின் விவரம் பின்வருமாறு: நாள்: 08.09.2018 அனுப்புநர்: S. ஜோதி, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்-9, வேலூர் மாவட்டம். பெறுநர்: துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர். அய்யா, பொருள்: திடீர் தணிக்கை – வேலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் அலுவலகம் - திடீர் தணிக்கை – நடவடிக்கை எடுத்தல் வேண்டி – மனு.-- வேலூர் மாவட்டம், வேலூர் மாநகர், சத்துவாச்சாரி தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய பகுதி-2-ல் உள்ள முருகன் தியேட்டர் சாலையில் உள்ள தனியார் கட்டிடத்தின் மேல் தளத்தில் இயங்கி வரும் நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் அலுவலகத்தில், நகர் ஊரமைப்பு துணை இயக்குனர்

மற்றும் அவருடைய மேற்பார்வையாளர் ஆகியோர் Regular Layout approval, Unapproved Layout regularization works, Building approval மற்றும் இதர நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் அலுவலக பணிகளை செய்வதற்கு மனுதாரர்கள் அப்ருவல் பெறுவதற்காக விண்ணப்பம் செய்து, அரசு நிர்ணயம் செய்த தொகையை ஆன் லைனில் உரிய முறையில் செலுத்தி, பின்னர் உதவி இயக்குனர் பொறுப்பு: துணை இயக்குனர் அவர்களை அணுகும்போது, ஏக்கருக்கு பணம் ரூ.10,000/- வீதம் கையூட்டு பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் பேரில், ஊர்ஜிதம் செய்ததில் உதவி இயக்குனர், பொறுப்பு: துணை இயக்குனர் நேரடியாக பொது மக்களிடம் இருந்து அவர் அலுவலக நேரத்திற்கு பிறகு அப்ருவல் ஆர்டர் வழங்க பணம் லஞ்சமாக பெறுவது உறுதி செய்யப்பட்டபடியாலும், 07.09.2018-ம் தேதி மாலை 19.30 மணி முதல் 08.09.2018-ம்தேதி 01.50 மணி வரை நான், வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் மற்றும் குழுவினருடன் இணைந்து, மேற்படி வேலூர் நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் அலுவலகத்தில் இருதுறை கூட்டு திடீர் சோதனை செய்தோம். இந்த சோதனையின்போது, நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் அலுவலகத்தில் உதவி இயக்குனர் பொறுப்பு: துணை இயக்குனர் திரு. C. சுப்ரமணியம் மற்றும் திரு. G. சகாதேவன், மேற்பார்வையாளர், வரைவாளர் நிலை-II, மற்றும் இதர அலுவலர்கள் பணியில் இருந்தனர். இந்த திடீர் சோதனையை ஆரம்பிப்பதற்கு முன்பு, அலுவலகத்தில் பணியில் இருந்த அலுவலர்கள் முன்பு சோதனைக்கு சென்ற அலுவலர்களாகிய எங்களை அறிமுகப்படுத்திக்கொண்டும், எங்களை சுயபரிசோதனைக்கு உட்படுத்திக்கொண்டும், எங்களிடம் எந்த பணமும் இருப்பில் இல்லையென்று அலுவலக ஊழியர்களுக்கு உறுதி செய்து காட்டப்பட்டது. அந்த தணிக்கையின்போது, நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் அலுவலகத்தில், திரு.C. சுப்பிரமணியம் (57/18), த/பெ செல்லன், உதவி இயக்குனர் பொறுப்பு: துணை இயக்குனர் அவர்களை சோதனை செய்தபோதும் மற்றும் அவரது மேஜையினை சோதனை செய்தபோதும் அவரது இருப்பில் இருந்த பணம் ரூ.2,66,500/-க்கு, அவரால் சரியான முகாந்திரம் கூற இயலாததால், அந்த பணம் கையூட்டாக பெற்ற பணம் என வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேலும், திரு. சுப்ரமணியம், உதவி இயக்குனர், பொறுப்பு: துணை இயக்குனர், நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் அலுவலகம்; வேலூர் மண்டலம் அவர்களை, அவருடைய மேஜையில் இருந்த பெயர்கள் எழுதி அதில் அதற்கு நேரெதிரே தொகைகள் எழுதிய தாள் குறித்து விசாரிக்க, அவர் அலுவலகத்தில் அதிக வேலை பளு காரணமாக தான் 37 வெளி நபர்களை அழைத்து, தனியார் இடத்தில் வைத்து அலுவலக பணிகளை செய்து வருவதாகவும், அந்த 37 நபர்களுக்கு மாதம் தலா ரூ.9,000/-

சம்பளமாக மொத்தம் ரூ.3,33,000/-யை அவர் கொடுத்து வருவதாக சொன்னார். அந்த 37 வெளிநபர்களையும் அலுவலக வேலை செய்வதற்காக, வேலூர் சத்துவாச்சாரி விவேகானந்தர் முதல் தெருவில் உள்ள திரு.கார்த்திக்ராஜ் த/பெ வீரராகவன் என்பவருக்கு சொந்தமான கதவு எண்.4/243 வீட்டின் கீழ் தளத்தை அவர் வாடகைக்கு எடுத்து, அந்த வெளி நபர்கள் அலுவலக பணி செய்து வருவதாக சொன்னார். மேலும், திரு. G. சகாதேவன், மேற்பார்வையாளர்/வரைவாளர் நிலை-II என்பவரின் மேஜை மீது வைக்கப்பட்டிருந்த ஆவணங்களை சோதனையிட, ஆவணங்களுக்கு இடையில் பணம் ரூ.4,100/- இருந்தது. அந்த பணத்திற்கு திரு. சகாதேவன் அவர்களால் சரியான முகாந்திரம் கூற இயலாததால், அந்த பணம் வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேலும், மேற்படி அலுவலகத்திற்கு ஏற்கனவே வந்திருந்த ஐந்து தனி நபர்களை சோதனை செய்ய, அவர்களில் நான்கு பேர்களிடம் இருந்த பணத்திற்கு சரியான முகாந்திரம் கூறாததால், பணம் ரூ.58,000/-யை வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. இந்த இருதுறை திடீர் கூட்டு சோதனை குறித்த விவரங்கள் செயல்முறையாக தயாரிக்கப்பட்டு, அதில் கையொப்பம் செய்யப்பட்டது. அதன் பின்னர் இருதுறை திடீர் கூட்டு சோதனையின் செயல் முறையின் தொடர்ச்சியாக, 07.09.2018-ம்தேதி 23.50 மணி முதல் 08.09.2018-ம்தேதி 01.50 மணி வரை கதவு எண்.4/243, விவேகானந்தர் முதல் தெரு, வள்ளலார், சத்துவாச்சாரி, வேலூர் என்ற முகவரியின் முதல் தளத்தில் குடியிருந்து வரும் மேற்படி வீட்டின் உரிமையாளர் திரு.கார்த்திக்ராஜா த/பெ வீரராகவன் என்பவர் முன்னிலையில் வீட்டின் தரை தளத்தில் சோதனை செய்ய, அங்கு Staff Attedance Register என்ற வருகை பதிவேடு இருந்ததை பார்வை செய்ய 2018 செப்டம்பர் மாதத்திற்கு வரிசை எண். 1 முதல் 37 வரை எழுதி அதில் 1) வித்யா பாரதி, 2) சரத்குமார், 3) அன்பரசன், 4) அனிதா, 5) சூரியகலா, 6) ஸ்ரீபிரியா, 7) பானுபிரியா, 8), ஜெயசித்ரா, 9) உத்தண்டி, 10) உதயகுமார், 11) முத்து, 12) அருள், 13) லதா, 14) பவித்ரா, 15)காயத்திரி, 16)சந்திரகலா, 17) அஸ்லாம், 18) சுகன்யா, 19) குமார், 20) வினோதினி, 21) அரவிந்த் 22) மகா, 23) நர்மதா, 24) லாவண்யா, 25) ஜாய்ஸ், 26) ஷோபா, 27) திவ்யா, 28) அகிலா, 29) மீனா, 30) அகல்யா, 31) ஷோபனா, 32) நவீன்குமார், 33) அஜீத், 34) பாரத், 35) ஜெயசுதா, 36) மௌநித்தா மற்றும் 37) ராஜ் ஆகியோர் என்று பெயர்கள் குறிப்பிடப்பட்டு இருந்த வருகைப்பதிவேட்டினையும் மற்றும் வழக்கிற்கு தேவையான ஆவணங்களை உதவி இயக்குனர் திரு. சுப்ரமணியம் அவர்கள் எடுத்து, ஆஜர் செய்ததை அவரிடம் சான்றொப்பம் பெற்று வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. இந்த வருகைப்பதிவேடு குறித்து பொறுப்பு துணை இயக்குனர் நகர் ஊரமைப்பு திரு.சுப்பிரமணியம்

அவர்களிடம் கேட்க அப்பதிவேடு ஓய்வு பெற்ற நகர் ஊரமைப்பு மேற்பார்வையாளர் திரு.ராஜசேகரன் என்பவரால் பராமரிக்கப்படுவதாகவும் வருகைப்பதிவேட்டில் உள்ள 37 நபர்களையும் தான் மாத ஊதியம் ரூ.9,000/- முதல் 10,000/- வரை கொடுத்து கடந்த 1 வருடத்திற்கும் மேலாக 2017 முதல் பணியில் வைத்திருப்பதாகவும், அவர்கள் மேற்படி நபர்களுக்கு சொந்தமான மடிகணினியில் வரைபடம் வரைதல் மற்றும் தனி நபர் வீட்டுமனை அங்கீகாரம் சம்மந்தமான கோப்புகளுக்கு தேவையான தாள்களை தயார் செய்தல் போன்ற பணிகளை செய்துவருவதாகவும் மேற்சொன்ன 37 நபர்களையும் ஓய்வு பெற்ற மேற்பார்வையாளர் திரு.ராஜசேகரன் அவர்கள் மேற்பார்வை செய்து அவர்களுக்கு பணி ஒதுக்குவதாகவும் திரு.ராஜசேகரன் அவர்களுக்கு மாதம் ரூ.15,000/- ஊதியம் வழங்குவதாகவும் தெரிவித்தார். பின்னர் அந்த வருகைப்பதிவேடு வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேலும், வழக்கு சம்மந்தப்பட்ட இதர ஆவணங்களையும் வழக்கின் நிமித்தம் கைப்பற்றி, அவற்றில் உதவி இயக்குனர் திரு. சுப்ரமணியம் சான்றொப்பம் செய்து கொடுத்தார். அங்கு வேறு எவ்விதமான பணமும் கைப்பற்றப்படவில்லை. திரு. C. சுப்ரமணியம், உதவி இயக்குனர், பொறுப்பு: துணை இயக்குனர், நகர் ஊரமைப்பு அலுவலகம் அவர்கள் அடையாளம் காட்டிய, அவர் விதிகளுக்கும், சட்டத்திற்கும் முரணாக தனியார் கட்டிடத்தில் தனி நபர்களை வைத்து அலுவலக பணிகளை செய்து வந்த இடத்தில் மேற்கண்ட சோதனை சம்மந்தமாக விரிவான செயல்முறை ஒன்று, 07.09.2018-ம்தேதியன்று 23.50 மணி முதல் 08.09.2018-ம்தேதியன்று 01.50 மணி வரை தயார் செய்யப்பட்டது. இந்த வழக்கின் நிமித்தம் நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் அலுவலக அலுவலர்களிடமிருந்து, அவர்களால் சரியான முகாந்திரம் கூற இயலாத கையூட்டாக பெற்ற பணம் ரூ.2,70,600/- மற்றும் அந்த அலுவலகத்திற்கு வந்திருந்த தனி நபர்களிடமிருந்து சரியான முகாந்திரம் கூற இயலாத பணம் ரூ.58,000/- ஆக மொத்தம் கையூட்டு பணமாகிய ரூ.3,28,600/- (ரூபாய் மூன்று இலட்சத்து இருபத்தெட்டாயிரத்து மற்றும் அறுநூறு மட்டும்) வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. எனவே, நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் அலுவலக பணிகளை செய்வதற்கு முறைகேடாக பொது மக்கள் மற்றும் மனுதாரர்களிடமிருந்து பணம் வசூல் செய்த 1) திரு. C. சுப்பிரமணியம் (57/18), த/பெ செல்லன், உதவி இயக்குனர், பொறுப்பு: துணை இயக்குனர், நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் அலுவலகம், வேலூர் மண்டலம், சத்துவாச்சாரி, வேலூர்-9 மற்றும் 2) திரு. G. சகாதேவன் (54/2018), த/பெ கோவிந்தப்பிள்ளை, மேற்பார்வையாளர்/ வரைவாளர் நிலை-II, நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் அலுவலகம், வேலூர் மண்டலம், சத்துவாச்சாரி, வேலூர்-9 ஆகியோர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இத்துடன்

மேற்படி இருதுறை கூட்டு சோதனையின்போது கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் செயல்முறைகள் இணைத்துள்ளேன். அந்த செயல்முறைகளில் இருதுறை திடீர் கூட்டு சோதனை சம்மந்தமாக அனைத்து விவரங்களையும் குறிப்பிட்டுள்ளேன். மேலும், இருதுறை திடீர் கூட்டு சோதனையின்போது, கைப்பற்றப்பட்ட கையூட்டு பணம் ரூ.3,28,600/-ஐ நான் எங்கள் அலுவலக பணப்பதிவேட்டில் பதிவு செய்தும், அதனை வேலூர் கருவூலத்தில் பாதுகாப்பு பெட்டகத்தில் வைத்து, நீதிமன்றத்திற்கு அனுப்பும்போது எடுத்து கொடுக்கிறேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். Sd/-xxxxxxxx எஸ். ஜோதி 08/09/18 துணை ஆய்வுக்குழு அலுவலர், வேலூர் & திருவண்ணாமலை மாவட்டங்கள்.

Sir,

i. Received the complaint on 08.09.2018 at 07.00 hrs., and the same was forwarded to the Directorate of Vigilance and Anti-Corruption, Chennai on 08.09.2018 at 07.30 hrs. Sd/-xxxxx P.Vijayalakshmi, 08.09.2018 Inspr./V&AC/VLR.

ii. After obtaining concurrence from DVAC, Chennai and adopting the procedures followed in DVAC., a case in Vigilance and Anti-Corruption, Vellore Detachment Cr. No. 09/2018, u/s 102 Cr.P.C r/w 7 of (Amendment) PC Act, 2018 was registered on 15.10.2018 at 15.30 hrs. Sd/-xxxxx P.Vijayalakshmi, 15.10.2018 Inspr./V&AC/VLR.

iii. பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் அசல் புகார் மற்றும் இரு துறை திடீர் கூட்டு சோதனைகளின் செயல்முறைகள் - இரண்டு ஆகியவற்றை கனம் முதன்மை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, வேலூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிக் கொள்ளப்பட்டது.

15/10/18
(P. VIJAYALAKSHMI)
Inspector of Police
V&AC
Vellore